செய்தி வெளியீடு எண்:191 நாள் : 30.04.2015

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு புரட்சித்தலைவர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் சுகாதார திட்டங்கள், மருத்துவக் கல்வி, மருத்துவமனைகள் மேம்பாடு குறித்த கையேடுகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இந்திய மருத்துவ கவுன்சில் தலைவருக்கு வழங்கினார்!

சுகாதார திட்டங்களை செயல்படுத்துதல், மருத்துவக்கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து தமிழக சுகாதாரத் துறை அலுவலர்களுடன் ஆலோசனை!

சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலம் இந்திய மருத்துவ குழும தலைவர் டாக்டர் ஜெயஸ்ரீபன் மேத்தா பாராட்டு!

சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இந்திய மருத்துவக் கவுன்சில் தலைவர் டாக்டர் ஜெயஸ்ரீபன் மேத்தா அவர்கள் இன்று சென்னை வருகை தந்தார், அவரை மாண்புமிகு தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் சந்தித்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் சுகாதார திட்டங்களின் செயல்பாடுகள் மருத்துவக்கல்வி மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மேம்பாடு ஆகியவை குறித்த கையேடுகளை வழங்கினார்.

பின்னர் தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை உயர் அதிகாரிகள், மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தமிழக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல்த்துறையின் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சுகாதாரத் திட்டங்கள் மருத்துவக் கல்லூரிகளின் செயல்பாடு, மருத்துவமனைகளின் மேம்பாடு, திட்டப்பணிகளின் சாதனைகள் குறித்து விளக்கமளித்தார். தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளை பொறுத்தவரை ஆண்டுக்கு 1 மருத்துவக் கல்லூரி என்ற கொள்கை அடிப்படையில் இந்திய மருத்துவக் குழுமத்தின் விதிமுறைகளை பின்பற்றி, தரமான கட்டமைப்பு, தேவையான அனைத்து

உபகரணங்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என இந்திய மருத்துவக் குழும தலைவரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

அனைத்தையும் கேட்டறிந்த இந்திய மருத்துவ கவுன்சில் தலைவர் அவர்கள் தமிழகத்தில் அனைத்து சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துதல், அரசு மருத்துவக்கல்லூரிகள், மருத்துவமனைகளை மேம்படுத்துதல், அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் தமிழகத்தில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கு கூடுதல் இடங்களை சேர்த்திட அனுமதி பெறுதல் ஆகியவற்றை தமிழக அரசு மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அனைத்து சுகாதார திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என பாராட்டினார்.

மேலும் அவர் செய்தியாளர்களிடம் கூறும் பொழுது, இந்திய மருத்துவக் குழுமம் பொதுவாக இரண்டு பிரச்சனைகளை தீர்க்க முயற்சிக்கிறது. 1956ம் ஆண்டு கொண்டுவந்த பாடத்திட்டங்கள் கல்வி முறையே நடைமுறையில் உள்ளது, இதை மாற்றி புதிய பாடத்திட்டங்களையும், புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தினால் திறமை மிக்க மருத்துவர்களை உருவாக்கிட முடியும். இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம். கல்லூரியில் படிப்பை முடித்த மருத்துவ மாணவர்கள் இன்டன்ஷிப் எனப்படும் பயிற்சியை மேற்கொள்ளாமல் வெளியேறுகின்றனர். இப்பயிற்சியை கட்டாயப்படுத்தினால் அனைவரும் அனுபவமிக்க மருத்துவராக ஆக முடியும்.

சென்னையில் புதிய மருத்துவ கல்லூரிக்கு அனுமதி வழங்கிட பரிசீலிக்கப்பட்டு வருகிறது. வரும் மே 15க்குள் அனுமதி வழங்கிட வாய்ப்புள்ளது. இக்கல்லூரியில் 100 இடங்கள் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருந்துத் துறை ஆணையர் திரு. மோகன் பியாரே இ.ஆ.ப., இந்திய மருத்துவ குழும துணைத் தலைவர் டாக்டர் பிரமநாதன், எம்.ஜி.ஆர். பல்கலைக்கழ துணை வேந்தர் டாக்டர் சாந்தாரம், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துணை இயக்குநர் டாக்டர் அ. சந்திரநாதன் மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**